1993 அக்டோபர் 27]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு வந்த பிறகு கூடுதலாகத்தான் எல்லாவற்றையும் ஆக்கி இருக்கிறோமே தவிர எந்தப் பொருளையும் குறைக்கவில்லை. ஒரு கிராம் எண்ணெய் கொடுக்கப்பட்டு வந்ததை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் 2 கிராம் எண்ணெயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை. அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

32—

வேம்பு மரத்தை தமிழ்நாட்டில் அதிகம் வளர்க்க நடவடிக்கை.

* 17325—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக அளவில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த வேம்பு மரத்தை தமிழ்நாட்டில் அதிகம் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதக் கமலங்களில் என்னுடைய பணிவான வணக்கங்களை முதலில் சமர்ப்பிக்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் வரிசையில் உறுப்பினராக இருந்த அமைச்சரவர்கள், இப்போது அமைச்சர் ஆனதால் அந்த வரிசையில் அமர்ந்திருக்கிற நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்து மேசையைத்தட்டி ஒலி எழுப்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம், வேம்பை ஒரு சர்வரோக சஞ்சீவியாகவே இந்த அரசு கருதுகிறது. அதை அதிக அளவில் வளர்ப்பதற்கு தமிழ்நாட்டில் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தனித்திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் காடுபடு சிறுபொருட்கள் திட்டத்தின் கீழ் (மைனர் ப்ராட்யூஸ் ஆஃப் பாரஸ்ட்) வேம்பு ஒரு இனமாக சேர்த்து வளர்க்கப் படுகிறது. இத்திட்டம் ஆண்டுதோறும் சுமார் 1,000 எக்டேர் பரப்பளவில் ரூ. 55 இலட்சம் நிதி அளவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையைப் பொறுத்த அளவில் வேம்பு மரங்கள் தமிழ்நாட்டில் முழுமையாக வனத்துறையில் இருக்கின்றன. தனியார்களும் வேம்பு மரங்களை வளர்க்கிறார்கள். வேம்பு மரங்கள் வீடு கட்டுவதற்காக வெட்டப்படுகின்றன. வேம்பு மரத்திலிருந்து வேப்பெண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்றது. வேப்பம் பிண்ணாக்கு வேளாண்மை துறைக்குப் பயன்படுகிறது. இப்போது மிகப்புரட்சிகரமாக வேளாண்மை செய்கின்ற நேரத்தில் யூரியாவுடன் வேப்பம் பிண்ணாக்கைக் கலந்து சாகுபடி செய்தால் அந்த யூரியாவினுடைய தரம் உடனே இறங்காது. 10 நாட்கள் 15 நாட்கள் நிதானமாக சக்தி கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. வேப்பம் பிண்ணாக்குக்கு அந்த சக்தி இருக்கிறது. அப்படி இருப்பதால் இந்த வேப்பம் பிண்ணாக்கு நான்கு துறைகள் சம்பத்தப்பட்டதாக இருக்கிறது. (1) வேளாண்மைத்துறை (2) வனத்துறை (3) காதி போர்டு (4) பொதுப்பணித்துறை. பொதுப்பணித்துறை எவ்வாறு சம்பந்தப்படுகிறது என்று சொன்னால் கட்டிடங்கள் கட்டும்போது வீடுகளுக்கு இந்த மரங்கள் முக்கியமாகப் பயன்படுகின்றன. ஆகவே, இதை ஆராய்ந்து ஒரு தனி வாரியம் அமைத்தால் இன்னும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியும். இவ்வளவு பயன் அளிக்கின்ற காரணத்தால் வேம்பு மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, வாரியம் அமைக்கப்படுமா என்பதுதான். உரையாற்றாமல் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : வேம்பு மரங்கள் அதிகமாக ஆதாயம் தருகின்ற காரணத்தால் நீங்கள் இதற்கு ஒரு தனி வாரியம் கூட அமைத்தால் நலமாக இருக்கும். அதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த காடுபடு சிறுபொருட்கள் (minor produce) திட்டத்தின் மூலமாக புளி, கத்தாழை, நெல்லி போன்ற பல்வேறு மரங்கள் வளர்க்கப்

படுகின்றன. இந்த வேம்பு சிறிய செடியாக வருகிறபோதே ஆடுமாடுகள், கன்றுகாலிகள் எல்லாம் அதை ருசியாகச் சாப்பிட்டு விடுகின்றன. ஆகையால், பல்வேறு மரங்களுக்கு இடையே இது நடப்படுகிறது. ஆக, இன்றைக்கு தமிழ் நாட்டை பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த மைனர் ப்ராடியூஸை எடுப்பதற்காக நம்முடைய பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகையாக விடுகிறார்கள். வனத்துறை நிர்ணயிக்கிற தொகையிலிருந்து 10 சதவிகிதம் குறைவாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 19 பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 10 சதவீதம் தள்ளுபடியில் அவர்களுக்கு கொடுப்பதன் மூலமாக இந்த மைனர் ப்ராடியூஸ் மூலமாக சென்ற ஆண்டு மட்டும் 135.67 இலட்சம் ரூபாய் இந்த அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. இந்த ஆண்டு 144.32 இலட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் வரும் என்று கருதப்படுகிறது. ஆக இந்த வேம்பு காய், கொட்டைகள் எல்லாம் சாதாரணமாக தமிழகத்தில் இருக்கிற ஏழைகள் எடுத்துச் செல்கிறார்கள். இதை ஏழைகள் எடுத்துச் செல்வதை நாம் தடுப்பது இல்லை. அவர்களுக்கு அதன் மூலமாக சிறிய வருமானங்கள் வருவதாகக் கருதுகிறோம். எனவே, அவர்கள் அதை எடுத்துச் செல்வதை இதுகாறும் நாம் அனுமதித்து வருவதை தொடர்ந்து அனுமதிப்பது என்பதே புரட்சித் தலைவியினுடைய ஒரு நல்ல செயல்பாடாக இருக்கும் என்று நான் கருதுகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி). எனவே, இந்த வேம்பை வளர்ப்பதற்கு தனியாக ஒரு வாரியம் தேவை என்பது சரியாக இருக்குமா என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாரியம்மனுக்கு இதனுடைய இலை மிக விருப்பமானது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். பாண்டிய மன்னர்கள்கூட வேப்பம் பூவை மாலையாக அணிந்திருந்தார்கள். இன்றைக்கு சர்வதேச அளவில் வேம்பே இல்லாத ஜெர்மனியில் 1980-ல் ஒரு மிகப்பெரிய சர்வதேச மாநாட்டில் இந்த வேப்பமரம் குறித்து ஆராய்ந்திருக்கிறார்கள். அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அதாவது யு.எஸ்.ஏ. விவசாய இலாக்கா பூச்சிக் கொல்லி மருந்தாக இதை உபயோகிப்பதற்கு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். தமிழகத்தினுடைய வனத்துறையும் விவசாயத்துறையும் இது குறித்து மிகத் தெளிவாக இன்றைக்கு ஆராய்ந்து வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒவ்வொரு வகை மரத்திற்கும் வாரியம் வைத்துக்கொண்டே போனால் நாடு தாங்காது காடும் தாங்காது நிதிநிலையும் தாங்காது (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த வேப்ப மரங்கள் இப்போது ஒவ்வொரு வீட்டிலும் கூட இருக்கின்றன. இங்கே குளங்கள் நிறைய இருக்கின்றன. அந்த குளங்களில் எல்லாம் வேப்ப மரம் வளர்க்கிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : இப்போது அண்மையில் கூட டாக்டர் புரட்சித் தலைவி வனச்சோலைத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 20 இலட்சம் மரக் கன்றுகளை நடுவதற்காக இந்த அரசு ஒரு திட்டத்தை வகுத்தது. சுமார் 14,76,636 மரக் கன்றுகளை நாம் நட்டோம் துறையின் மூலமாக. அதற்குப் பிறகு தமிழகத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் 6,14,910 மரக்கன்றுகளை வாங்கிச் சென்று நட்டார்கள். தமிழகத்தில் 500 விழாக்கள் நடைபெற்றன. இலட்சக்கணக்கான மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று ஏரி, குளம், பாதைகள், சாலைகள் ஆகிய பகுதிகளில் எல்லாம் நடுகின்ற பணி இன்று அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் மரக்கன்றுகளை எல்லாம் நடுகிறோம். இந்த வேம்பு எல்லா வகைக்கும் பயன்படுகிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மைதான். எனவே தரிசு நிலங்களில் அதாவது விவசாயத்திற்கே லாயக்கற்ற நிலங்களை வைத்திருக்கின்ற சில தனியார்கள் இந்த மரங்களை நட வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கு அரசு ஏதாவது உதவி செய்வதற்கு முன்வருமா? அப்படி என்றால் இந்த மரக்கன்றுகளைக் கொடுப்பதோடு அங்கே தண்ணீர் இல்லாவிட்டால் அந்தத் தண்ணீரை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் 'போர்' போட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் இவற்றை நடுவதற்கு இந்த அரசு எல்லாவிதமான ஒத்துழைப்பும் கொடுத்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) நம்முடைய துறையின் மூலம் போர் போட்டுக் கொடுக்க முடியாது. மற்ற துறையினர்தான் அதைச் செய்ய வேண்டும்.

1993 அக்டோபர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.கே.எஸ். துரைமுருகன்.

திரு. கே.எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேப்ப மரத்தினுடைய முக்கியத்துவம் பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களில் பேய் பிடித்தவர்களுக்கு இந்த வேப்ப இலையைக் கொண்டு அடித்தால், பூசாரியை வைத்து அடித்தால் பேய் விலகிவிடும் என்ற ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. நாட்டிலே இன்றைக்கு சிலபேர் பேய் பிடித்து அலைகிற காரணத்தால் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வேப்ப மரங்களைத் தமிழகத்தில் அதிக அளவில் உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெறும் நம்பிக்கையின் காரணமாக நடைபெறுவதல்ல. தொன்மைதொட்டே இந்தியத் திருநாட்டில் வேப்பமரத்தை ஒரு சர்வரோக சஞ்சீவியாகக் கருதுகிறார்கள். இது பேயை விரட்டுவது மட்டுமல்ல. பல்வேறு கொடிய வியாதி வந்தால் கூட அதைத் தடுக்க முடியும் என்று கருதப்பட்டது. எனவே பூர்வீக உணர்வாலே இதைச் செய்வதல்ல. இதில் மிக அதிகமான மருந்துப் பொருட்கள் அடங்கி இருக்கிற காரணத்தால் தான் அவ்வாறு செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 33 திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

33—

கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியில பகுதிநேரப் படிப்பாக உள்ள எம்.பில். (M.Phil.,) படிப்பை முழு நேர படிப்பாக மாற்றுதல்

9502— திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் தற்போது பகுதிநேரப் படிப்பாக உள்ள எம்.பில். (M.Phil.,) படிப்பை முழுநேர படிப்பாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றி அமைக்கப்படும்